DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
In the Court of the Assistant Sessions Judge, Gingee

| | |
|---|---|
| Sessions | SC Case No. 125/2022 |
| Deposition of Witness for | Prosecution<br>Defence<br>Court |
| Name | **PW – 1 அக்பர்** |
| Father's Name | ஷரீப் |
| Village | மேல்களவாய் |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | 30 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969. On 15/11/2024

**முதல் விசாரணை**

நான் ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அது அ.சா.ஆ-1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். 2 வருடத்திற்கு முன்பு புகார் கொடுத்தேன். என் தம்பியின் மனைவி பிரச்சனை காரணமாக பிரச்சனை செய்ததால் புகார் கொடுத்தேன். என் தம்பியின் மனைவிக்கு 2 வருடமாக குழந்தை இல்லை என்பதால் அவரது தாயார் வீட்டிற்கு சென்றார். என் தம்பி அங்கு சென்று அழைத்தார் அதற்கு என் தம்பி மனைவி நீ வேற யாரையோ வைத்துகொண்டு உள்ளாய் அதனால் நான் வரமாட்டேன் என்று சொன்னார். அதை அவர் சொந்தகாரரிடம் சொல்லிவிட்டார். அவர்களுக்கும் எங்களுக்கும் ஏற்கனவே பழைய பிரச்சனை இருந்தது தம்பியின் மனைவி சொன்னதை ஒரு காரணமாக வைத்து எங்களை வந்து அடித்துவிட்டார்கள். எங்கள் குடும்பத்தில் உள்ள அனைவரும் கை, கால், தலையில் அடிப்பட்டது. இதை வைத்து செஞ்சியில் பஞ்சாயத்து வைத்து பேசினார்கள்.

எனக்கு நியாயம் கிடைக்கவில்லை என்பதால் எங்களுக்கு ஏற்பட்ட காயங்களை நான் முகநூலில் பதிவேற்றம் செய்தேன். முதலில் என்னை தலையில் இரும்பு ராடு கொண்டு அபுபக்கர், பேராஜின், அனிபா, முகமது அலி ஆகியோர்கள் அடித்தார்கள்

அதில் எனக்கு காயம் பட்டு 7 தையல் போடப்பட்டது. என் தம்பியை அடித்ததால் என் தம்பிக்கு 11 தையல் போட்டார்கள். என் மாமனாருக்கு இடது கை எலும்புமுறிவு ஏற்பட்டு பிளேட் வைத்தும் சரியாகவில்லை. எங்களை இன்றுவரை மிரட்டி வருகிறார்கள். பைக்கில் சென்றாலும் திடீரென இடிப்பது போல் வருகிறார்கள். புகார் நான் தான் கொடுத்தேன். காயம் பட்ட எங்களை நடராஜ் எஸ்.ஐ தூக்கி செஞ்சி அரசு மருத்துவமனைக்கு ஆம்புலன்சில் அனுப்பிவைத்தார். புகார் கொடுத்தது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.

செஞ்சி அரசு மருத்துவமனையில் முதல்உதவி சிகிச்சைக்கு பின் எங்களை முண்டியம்பாக்கம் மருத்துவகல்லூரி அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தார்கள். என் தம்பி எதிரிகள் அடித்ததிலிருந்து சுயநினைவு இல்லாமல் இருந்தார். நாங்கள் 1 வாரத்திற்கு மேலாக சிகிச்சையிலிருந்தோம். போலிசார் மருத்துவமனைக்கு வந்து விசாரித்தார்கள் தம்பி சுயநினைவு இல்லாததால் அவரால் சம்பவம் பற்றி சொல்லமுடியவில்லை. நான் சம்பவம் பற்றி கூறி புகார் வாக்குமூலம் கொடுத்தேன். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

என் தம்பி பெயர் அமீர் பாஷா. அவரது மனைவி பெயர் பர்சானா. 1 வருடகாலமாக அவர்களுக்குள் எற்பட்ட குடும்பபிரச்சனை காரணமாக பிரிந்து வாழ்ந்து வந்தார்கள். தம்பி மனைவி பர்சானா 1ம் எதிரி அபுபக்கருக்கு தம்பி மகள். குடும்ப பிரச்சனை காரணமாக 1ம் எதிரி அபுபக்கரின் தந்தை பஞ்சாயத்து பேசினார் என்றால் சரிதான். அந்த பஞ்சாயத்தில் அபுபக்கரின் தந்தையை நீங்கள் யார் பஞ்சாயத்து பேசுவதற்கு என கேட்டு நீங்கள் அடித்துவிட்டீர்கள் என்றால் இல்லை. இது தொடர்பாக உங்கள் தம்பி அமீர் பாஷா, அவரது மனைவி பர்சானாவையும் 1வது எதிரி இருவரையும் சேர்த்து தவறாக முகநூலில் பதிவு செய்திருந்தார் என்றால் சரிதான். உங்கள் தம்பி அமீர் பாஷா 1வருட காலத்தில் பர்சானாவுடன் சேர்ந்து வாழ்வதற்கு வழக்கறிஞர் மூலம் சட்டஅறிவிப்பு அனுப்பினாரா என்றால் அனுப்பிவைத்தார்.

உங்கள் தம்பி முகநூலில் பதிவு போட்டதின் காரணமாக இரு குடும்பத்திற்கும் ஏற்கனவே விரோதம் இருந்து வந்தது என்றால் சரிதான். பழைய பிரச்சனை சம்மந்தமாக நீங்களோ உங்கள் தம்பியோ எதிரிகள் மீது போலிசில் புகார் ஏதேனும் கொடுத்தீர்களா என்றால் ஊரிலேயே பஞ்சாயத்து பேசிவிட்டார்கள் அதனால்

கொடுக்கவில்லை. எங்கள் குடும்பத்தில் உள்ள அனைவரையும் எதிரிகள் தாக்கினார்கள். எனக்கு ஏற்பட்ட காயம் தொடர்பாக ஏற்பட்ட பஞ்சாயத்தில் எனக்கு நியாயம் கிடைக்காததால் எங்களுக்கு ஏறபட்ட காயங்களை புகைப்படம் எடுத்து முகநூலில் போட்டதாக முதல்விசாரணை கூறியுள்ளீர்கள் அது சம்மந்தமான பதிவை போலிசாரிடம் ஒப்படைத்தீர்களா என்றால் இல்லை.

இரும்பு ராடால் எதிரிகள் உங்களை அடித்ததால் உங்கள் தலையில் காயம்பட்டதாகவும், அதனால் உங்கள் தலையில் 7 தையல் போடப்பட்டுள்ளது அப்பட்டமான பொய் என்றால் சரியல்ல. அதேபோல் உங்கள் தம்பிக்கு தலையில் அடித்ததால் 11 தையல் போடப்பட்டது என்பதும் அப்பட்டமான பொய் என்றால் சரியல்ல. உங்கள் மாமனாருக்கு இடது கையில் எலும்பு முறிவு ஏற்பட்டு பிளேட் வைக்கப்பட்டு இதுநாள்வரை சரியாகவில்லை என்று கூறுவதும் அப்பட்டமான பொய் என்றால் சரியல்ல. உங்கள் குடும்பத்தில் உள்ளவர்களுக்கு ஏற்பட்ட காயங்களுக்கான மருத்துவ ஆவணங்கள், சிடி ஸ்கேன், எக்ஸ்ரே ஆகியவை போலிசாரிடம் ஒப்படைத்தீர்களா என்றால் இல்லை. எங்களிடம் தான் உள்ளது. போலிசார் உங்களை இதுசம்மந்தமாக விசாரித்தபோது எக்ஸ்ரே ரிபோர்ட், ஸ்கேன் ஆகியவற்றை கொடுத்தீர்களா என்றால் இல்லை.

அபுபக்கர், பேராஜின், அனிபா, முகமது அலி ஆகியோர் உங்களை அடித்ததாக சொல்லியுள்ளது அப்பட்டமான பொய் என்றால் சரியல்ல. தற்போது வரை கல் எடுத்து அடிப்பதாகவும், மிரட்டி வருவதாகவும், பயமாக உள்ளது எனவும், பைக்கில் மோதுவது போல் வருகிறார்கள் என்பதற்கு காவல் நிலையத்தில் புகார் ஏதாவது நீங்கள் கொடுத்தீர்களா என்றால் இல்லை. அடிப்பட்டவுடன் நீங்கள் நல்ல நிலையில் இருந்தீர்களா, மயக்க நிலையில் இருந்தீர்களா என்றால் மயக்க நிலையில் இருந்தேன். மேல்களவாயிலிருந்து செஞ்சி அரசு மருத்துவமனைக்கு சுமார் 3 1/2 - 4 கி.மீ தூரம் இருக்கும். உங்கள் ஊரிலிருந்து இருசக்கரவாகனத்திலோ காரிலோ வரவேண்டும் என்றால் 10 நிமிடங்களுக்குள் வந்துவிடலாம் என்றால் சரிதான்.

இந்த பிரச்சனை காலை 7.30 மணியளவில் நடந்ததாக போலிசாரிடம் கூறினீர்கள் என்றால் சரிதான். மருத்துவர் என்னை விசாரித்தார். உங்களை எத்தனை பேர் அடித்தார்கள் என்று கூறினீர்களா என்றால் எங்களை 4 ,5 நபர்கள் அடித்ததாக மருத்துவரிடம் கூறினேன். எதிரிகள் வீட்டின் எதிரே தாக்கியதாக மருத்துவரிடம்

கூறினேன். மருத்துவரிடம் 7.30 மணியளவில் சம்பவம் நடந்ததாக குறிப்பிட்டுள்ளேன். செஞ்சி அரசு மருத்துவமனையில் எனக்கும் என் தம்பிக்கும் கொடுத்தார்கள் எங்கள் இருவருக்கும் தையல் முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனையில் போடப்பட்டது.

எங்கள் இருவரின் ரத்துகறை படிந்த ஆடைகளை போலிசாரிடம் ஒப்படைக்கவில்லை. செஞ்சி அரசு மருத்துவமனையில் போலிசார் எங்களிடம் எந்த வாக்குமூலமும் வாங்கவில்லை. எதிரிகள் அடித்ததற்கு உங்கள் தம்பி 1 வாரமாக சுயநினைவு இல்லாமல் இருந்ததாக கூறுவது அப்பட்டமான பொய் என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் செஞ்சி மருத்துவமனைக்கு காலை 8 மணியளவில் சென்றோம். அதன்பிறகு செஞ்சியிலிருந்து முண்டியம்பாக்கம் மருத்துவமனைக்கு 9 மணிக்கு சென்றுவிட்டோம். செஞ்சி போலிசார் 11.00 மணியளவில் புகார் வாக்குமூலம் வாங்கினார். போலிசார் உங்களிடம் புகார் வாக்குமூலம் பெற்றபோது மருத்துவர் உடனிருந்தாரா என்றால் இல்லை.

நான் 3 நாட்களும், என் தம்பி 1 வாரகாலம் உள்நோயாளியாக சிகிச்சை எடுத்துகொண்டோம். TN 16 Y 8736 என்ற Honda deo என்ற வாகனமும், TN 16 W 6330 என்ற Pulsar வாகனமும் மேற்படி வாகனத்தில் பஞ்சாயத்து செய்வதற்காக எதிரிகள் வீட்டிற்கு சென்றோம் என்றால் சரிதான். இரண்டு வாகனத்திற்கும் உரிமையாளர் யார் என்பதற்கு ஆதாரமாக ஆர்.சி புத்தகம் போலிசாரிடம் ஒப்படைத்துள்ளோம். சேதப்படுத்தப்பட்ட இருசக்கர வாகனம் இரண்டையும் போலிசார் காவல்நிலையத்திற்கு எடுத்துசென்றுவிட்டார்கள். நடராஜ் எஸ்.ஐ எனக்கு போன்செய்து இரண்டு இருசக்கர வாகனங்களையும் எடுத்துசெல்லும்படி கூறியதால் 9 மாதம் கழித்து காவல்நிலையம் சென்று எழுதிகொடுத்து வாங்கிவந்தேன்.

வழக்கு சொத்து இரும்பு ராடை நீங்களும், உங்கள் தம்பியும் தயாரித்து போலிசாரிடம் ஒப்படைத்தீர்கள் என்றால் சரியல்ல. வழக்கு சம்மந்தமாக வாக்குமூலம் வாங்கிய பிறகிலிருந்து இன்றுவரை இடைப்பட்ட காலங்களில் வழக்கு சம்மந்தமான விசாரணை அதிகாரி தட்டச்சு மூலமாக வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். எதிரிகளை வழக்கின் விசாரணை அதிகாரி பாதிக்கப்பட்டவர்கள் முன்பாக அடையாளம் காண்பித்து இவர்கள் தான் அடித்தார்களா என எதிரிகளை முன்னிறுத்தி காண்பித்து விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். நீங்கள்

சொல்வது போல் சம்பவத்திற்கும், எதிரிகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. உங்களுக்கு ஏற்பட்ட காயம், உங்கள் தம்பிக்கு ஏற்பட்ட 3 காயங்களோ பஞ்சாயத்து செய்வதற்காக எதிரிகள் வீட்டிற்கு சென்று அவர்களை தாக்கவிட்டு இரண்டு இருச்க்கர வாகனத்தில் செல்லும்போது நீங்கள் அதிவேகமாகவும், கவனகுறைவாகவும் ஓட்டிசென்று ஏற்பட்ட விபத்தின் உங்களுக்கும், உங்கள தம்பிக்கு ஏற்பட்டது என்றால் சரியல்ல எதிரிகள் தான் எங்களை அடித்தார்கள். அதனால்தான் உங்கள் 2 வாகனத்திற்கும் சேதாரம் எற்பட்டது என்றால் சரியல்ல.

உண்மையில் எதிரிகள் தாக்கியிருந்தால் இருசக்கர வாகனத்தை நீதிமன்றத்தில ஒப்படைத்திருப்பார்கள் என்றால் சரியல்ல. உங்களுக்கு ஏற்பட்ட காயத்திற்கு ஏற்கனவே எதிரிகள் குடும்பத்திற்கு இருந்த முன்விரோதத்தை மனதில் வைத்துகொண்டு பொய்புகார் கொடுத்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. விழுப்புரம் சைபர் கிரைம் CCD-2 அபுபக்கர் அவதூறாக செய்திகளை பேஸ்புக்கில் நீதித்துறை மற்றும் என் உரிமை, என் குரல் என்ற முகநூல் ஐடி பதிவு செய்து பதிவிடுவதாக உங்கள் மீது புகார் கொடுத்துள்ளார் என்றால் அது என் தம்பியின் ஐடி ஆகும். உங்களுக்கு ஏற்பட்ட காயத்திற்கும் எதிரிகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் அது தவறு.